முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.11.2024), முகாம் அலுவலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, ஜெர்மனி நாட்டில் நடைபெறவுள்ள உணவு மாநாடு மற்றும் கண்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஜெர்மனி நாட்டிற்குச் செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்: ஹேமந்த் சோரன் - 'இந்தியா' கூட்டணி வெற்றி!

மக்களாட்சிக்கும் மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, நவ.24-

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஹேமந்த் சோரன் மற்றும் 'இந்தியா' கூட்டணியின் வெற்றி: மக்களாட்சிக்கும், மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி - என, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஜார்க்கண்ட் மாநிலத்தில் அனைத்துத் தடைகளையும் கடந்து வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள ஹேமந்த் சோரன் அவர்களுக்கும், நமது 'இந்தியா' கூட்டணிக்கும் எனது வாழ்த்துகள்.

அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவது, பழிவாங்கும் அரசியல் மற்றும் பல தடைகளைக் கடந்த 5 ஆண்டுகளில் பா.ஜ.க. உருவாக்கினாலும் அத்தனையையும் துணிச்சலுடனும் உறுதியுடனும் எதிர்த்து நின்று ஹேமந்த் சோரன் அவர்கள் வென்றுள்ளார்.

அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் அவரது தலைமையில் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை ஜார்க்கண்ட் மக்கள் தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இது மக்களாட்சிக்கும் மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!"

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வணங்கினார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம. ஜெயச்சந்திரன் , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் உடனிருந்தனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் :

கழக அயலக அணியினர் நல உதவிகள் வழங்கி கொண்டாடுவீர்!

அயலக அணியினருக்கு - அணியின் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. வேண்டுகோள்!

சென்னை, நவ. 24 - நவம்பர் 27 அன்று பிறந்த நாள் காணும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக அயலக அணி செயலாளர் -எம்.எம் அப்துல்லா எம்.பி அறிக்கை வருமாறு : -

இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு ,இளந்தலைவர் துணை முதல்வர்

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அயலக அணியின் சார்பில் எளியோர் எழுச்சி நாளாக கொண்டாடப்பட வேண்டும் அவ்வகையில் கழக அரசின் சாதனைகள் நலத்திட்ட உதவிகள் திண்ணைப் பிரச்சாரம் முன்னெடுப்பு!

அன்புள்ள கழக அயலக அணியின் உடன்பிறப்புகளே!

நம் இளந் தலைவர் கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக அயலக அணியின் மாநில நிர்வாகிகள், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட தலைவர்கள் துணைத் தலைவர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் அயல்நாடுகளில் வாழும் கழக அயலக அணி சொந்தங்கள் நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை அனைத்து தரப்பு மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக தெருமுனைப்பிரச்சாரம், திண்ணைப் பிரச்சாரம், ரத்ததான முகாம் மரக்கன்று நடுதல் காணொளி காட்சி பிரச்சார கூட்டங்கள் மற்றும் எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து தங்கள் பகுதிகளில் நடத்தி அதை ஆவணப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டுகின்றேன். அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்திட வேண்டும் என கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன்- ச.அரவிந்த் ரமேஷ், எம்.எல்.ஏ., நா.சந்திரபாபு பங்கேற்பு

புனிததோமையர்மலை தெற்கு ஒன்றிய பாகமுகவர்கள் கூட்டம் !

ஒன்றியச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் அறிவிப்பு !

சென்னை, நவ. 24 - புனிததோமையார் மலை தெற்கு ஒன்றிச் செயலாளர் ஜி.வெங்கடேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் சட்ட மன்ற தொகுதி புனிததோமையார்மலை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாகமுகவர்கள் கூட்டம் (BLA2) இன்று (24-11-2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு கோவிலம்பாக்கம் 200 அடி சாலையில் ஜே.டி. மஹாலில் புனித தோமையார் மலை தெற்கு கழக செயலாளர் ஜி.வெங்கடேசன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் ஒன்றிய கவுன்சிலர் ப.ரவி, ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதி ராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜே.இ. பாண்டியன் வரவேற்கின்றனர்.

எஸ்.ரவி, ஜே.டி.மனோநிதி, எச்.டி.போஸ், சமாதானம் நல்லமுத்து, த.டில்லிபாபு, கே.குமார், ஜி.எம்.ஏழுமலை, ஏ.ரங்கநாதன், ந.வேதகிரி, சிவபூசனம் ரவி. வி.கிரி, வி.ஜெயச்சந்திரன், எஸ். பன்னீர்செல்வம், மோகனபிரியா சரவணன், கல்பனா சுரேஷ். எஸ்.கோபு, எஸ்.லோகிதாஸ். ரமணி கணேசன், டி.என். அன்புமணி, கே.வி.கார்த்திகேயன். டி.மாதவன், கே.வி.விஜயகுமார், மஞ்சுளா ரமேஷ், சுமதி குமார். சுஜித்தா சத்தியா முன்னிலை வகிக்கின்றனர்.

மருத்துவம் (ம) மக்கள் நல வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன், முனைவர் தமிழகச்சி தங்கபாண்டியன், எம்.பி. சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், தொகுதி தலைமையிடப் பார்வையாளர் - கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா.சந்திரபாபு ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் பாலவாக்கம் க.சோமு, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன்,எம்.சி. பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன் எம்.சி., பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., எம்.கே.ஏழுமலை, ஏ.அரிகிருஷ்ணன், கிளை கழக செயலாளர்கள்: இ.ஜெகநாதன், எஸ்.கே.சீனிவாசன், இ. முருகன், பி.மணிக்கண்ணன், இ. முத்து, என்.எல்.பன்னீர்செல்வம், டி.சிகாமணி, ஏ.பி. சந்திரன், ஏ.சார்லஸ், ஆர்.சரவண மூர்த்தி, பொன் அர்ச்சுனன், எஸ்.சுரேஷ், டி.பிரங்கிளின், ஜே. ராஜேந்திரன், ஜெ.அறிவழகன், ஜி.வேலன், வி.சாரங்கன், ஆர். பண்டரிநாதன், இ.கிருபானந்த வாரியார், இ.சுகுமார், எம்.முத்துகுமார், ஆர்.சந்தோஷ்குமார், ஆர். . ஏ முகமதுகனி, எஸ்.ஸ்ரீதர், கே.ஸ்டாலின், டி.பார்த்திபன். ஆர்.ஆனந்தன், இ.தயாளன், வி. எஸ்.ஏழுமலை, எம்.வாசுதேவன், எம்.ஆனந்த பாஸ்கரன் உள்ளிட்ட அனைத்து கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். ஆர்.சொக்கலிங்கம். எம்.சி. நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர்கள். பாக முகவர்கள் (BLA2) அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசுகள் வழங்குகின்றனர்!

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் மாநில அளவிலான கராத்தே போட்டி!

ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், நவ. 24 - குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இளம் தலைவர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் ஷிஞ்சிடாய் கராத்தேடு இன்டர்நேஷனல் தமிழ்நாடு குளோபல் சிட்டோ ரியோ கராத்தேடு இந்தியா தமிழ்நாடு, இணைந்து நடத்தும் மாநில அளவிலான கராத்தே போட்டி இன்று (24.11.2024 ஞாயிற்றுக்கிழமை)காலை 9 மணியளவில் வைப்பூர் ஊராட்சி, வஞ்சுவாஞ்சேரி ராசி இன்ஜினியர் கல்லூரியில் ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி..ஆர்.பாலு எம்.பி. காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சிறு- குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து, பரிசுகள் வழங்கி சிறப்புரை யாற்றுகி றார்கள்.

இதில் திருப்பெரும் புதூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீஞ்சூர் கே.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி. உமா மகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட பிரதிநிதி எல்.டி.ஆர்.டாக்டர். இளைய கட்டபொம்மன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மு சுப்பிரமணி வ.நந்தகோபால், இ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்த சாரதி, வி.அரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் ப.அறிவொளி, எல்.சுதாகர், க.பா.ஆடலரசு, மா.சே.பிரகாஷ், ரா.தீபக்ராஜ் ஒன்றிய மாணவர் அணி நிர்வாகிகள் அ.ஜமீர், இரா.குமரவேல், செ.பார்த் திபன், இ. பாலாஜி, ஆர்.சையத்ரமிஸ், பொன். இளையபாரதி, மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், சங்கீதா வேலு,பொன். ரமேஷ் கவி, எஸ். கர்ணன், மலர்விழி தமிழ்அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், ஜி.எ.ராயப்பன், தினேஷ் கந்தசாமி, ம.ரேவதி, கே.என்.சி.சத்தியமூர்த்தி, வி.எஸ். கோதண்டராமன், என்.எஸ்.இளங்கோ, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், ஜி.இருசப்பன், ஏ.இ. பரசுராமன், ம.அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சித் குமார், இரா.சந்திரசேகர், மூ.குமார், வ.வீரபாண்டியன், ரா.தமிழ்தாசன், க. யுவராணி, என்.அரி முத்து, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகி கள், கிளைக்கழக செயலாளர்கள், கிளைக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா:

எழும்பூர் தொகுதியில் 500 பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., வழங்கினார்!

சென்னை, நவ. 24 - கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் வரும் நவம்பர் 27அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் ஏழைஎளியோருக்கு உதவிடும் வகையில் நலத்திட்ட உதவிகள்; நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் 10.11.2024 முதல் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இதனின் நான்காவது நிகழ்வாக 23.11.2024 அன்று, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77 'அ', புளியந்தோப்பு, சிவராவ் சாலையில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 500 பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் விளையாட்டு மேற்சட்டை (ஜெர்சி) ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ. பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா. காந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கர் நானா, மாவட்டப் பிரதிநிதி கமலக்கண்ணன்; 108 வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆரோக்கியம், 77வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் P.M.ஜெயலட்சுமி,

தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, ஜெ.சரவணன், 58வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் சரண்குமார், எழும்பூர் பகுதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றச் செயலாளர் எஸ்.தினகரன், பாக முகவர் கவிதா, மா.கார்த்திகேயன், ஜி.கோமகன், கே.பி.பார்க் சதிஷ், மணி, சத்யகலா, முத்து, பிரபாகரன், எழிலரசி, வழக்கறிஞர் நேரு பிரபா, சூளை நேரு, நாகராஜ், கி.புஷ்பராஜ், எட்டு என்ற விஜயகுமார், விநாயகம், கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் அயப்பாக்கம் பேரறிஞர் அண்ணா எழில் பசுமை பூங்கா வளாகத்தில் நேற்று (23.11.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் கீழ் மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் சமுதாய வளைகாப்பு விழாவினை துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகத்தினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த. பிரபு சங்கர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை வை.ஜெயக்குமார், அயப்பாக்கம் ஊராட்சித் தலைவர் அ.ம.துரைவிரமணி ஆகியோர் உள்ளனர்.